FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 154 இன் கீழ்~~

Under Section 173 BNSS / பிரிவு

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

CAS213029

1. District மாவட்டம் திண்டுக்கல் PS காவல்நிலையம் ஊ.க.கு. பிரிவு Year ஆண்டு 2026 FIR No. முத.அ எண் 01/2026 Date நாள் 31.01.2026

2. (i) Act சட்டம் The Prevention of Corruption Act Sections பிரிவுகள் 7(a)

(ii) Act சட்டம் 1988, as amended in 2018. Sections பிரிவுகள் –

(iii) Act சட்டம் – Sections பிரிவுகள் –

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : –

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 30.01.2026 Date from : நாள் முதல் 18.15 மணி முதல் Date to : நாள் வரை 21.45 மணி வரை

Time Period : நேர அளவு – Time from : நேரம் முதல் – Time to : நேரம் வரை –

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31.01.2026 Time : நேரம் 16.00 மணிக்கு

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கையெழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் திண்டுக்கல் மாவட்ட சார்பதிவாளர் அலுவலகம் - சுமார் 60 மீ. தெ.மே. திசையில்

Beat Number : முறைக் காவல் எண் – (b) Address : முகவரி –

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : – District : –
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. நித்தகோபி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் C. அய்யம்பெருமாள்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 44/2026 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –

Date of Issue : வழங்கப்பட்ட நாள் – Place of Issue : வழங்கப்பட்ட இடம் –

(f) Occupation : தொழில் ஆய்வாளர் ஆய்வாளர் (g) Address : முகவரி மாவட்ட ஆய்வகத்தில் அலுவலர் அலுவலகம், மதுரை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
B. முத்து, 40/2026, த/பெ த. பாலசுப்ரமணி, சார்பதிவாளர், கிரேடு-1 சார்பதிவகம், (On Deputation), சார் பதிவாளர், திண்டுக்கல் சார்பதிவகம், திண்டுக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

–

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
கவர்ப்பட்ட / கவர்ந்துசென்ற சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved : —
கவர்ப்பட்ட / கவர்ந்துசென்ற சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

31/1/26

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

31/1/26.

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் J. நாகேராகன்,
Rank: நிலை .....No. எண் .....
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
மேலில் தடுப்பு மற்றும் கண்காணிப்பு முறை,
திண்டுக்கல்.

திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.01/2026, சட்டப்பரிவு.7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தி அமைக்கப்பட்ட) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.

திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணைக்கண்காணிப்பாளர் ஆகிய நான் இன்று 31.01.2026-ம் தேதி மாலை 16.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது மதுரை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திருமதி.A.சித்ரகலா என்பவர் நிலையம் ஆஜராகி கணினி தட்டச்சு செய்து கொடுத்த புகாரை பெற்று 31.01.2026-ம் தேதி மாலை 16.00 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் A.சித்ரகலா, த/பெ.அய்யம்பெருமாள், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மதுரை, பெறுநர். காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல் அய்யா, நான் மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகத்தில் ஆய்வுக்குழு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 30.01.2026ம் தேதி திண்டுக்கல் மாவட்டம் கள்ளிமந்தையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சார்பதிவாளர் மற்றும் அலுவலர்கள் பத்திரபதிவிற்காக வரும் பொதுமக்களிடம் பத்திரங்களை பதிவு செய்வதற்கும், பதிவு செய்யப்பட்ட பத்திரங்களை திரும்ப ஒப்படைப்பதற்கும் வில்லங்க சான்று பெறுவது போன்ற சேவைகளை வழங்கவும், பத்திர எழுத்தர்கள் மூலமாக லஞ்சத்தை பணமாக கேட்டு பெறுவதாகவும் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் நேற்று மாலை 16.30 மணிக்கு திண்டுக்கல் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து நானும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.J.நாகராஜன் மற்றும் பார்ட்டி சகிதம் திடீர் சோதனை செய்வதற்காக அரசு வாகனம் TN 22 G 1040 பொலிரோ வாகனத்தில் கள்ளிமந்தையம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 18.15 மணிக்கு சென்றடைந்தோம். பின்பு கள்ளிமந்தையம் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் நுழைந்தபோது வரவேற்பறையில் பொதுமக்கள் அமர்ந்திருந்தார்கள். வரவேற்பறைக்கு அடுத்து மேற்கு முகம் பார்த்தவாறு இருந்த அறையில் வடக்கு முகம் பார்த்தவாறு சார்பதிவாளர் இருக்கையில் ஒருவர்

அமர்ந்திருந்தார். அவரிடம் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் அவரையும், உடன் சென்ற என்னையும் அறிமுகம் செய்து கொண்டு அவரைப்பற்றி கேட்க அவரது பெயர் திரு.B.மூர்த்தி என்றும், கீரனூர் சார்பதிவாளர் என்றும், On Deputation-ஆக கள்ளிமந்தையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக கடந்த 12.12.2025 முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் சோதனை செய்ய வந்த விபரத்தை தெரிவித்து சோதனைக்கு ஒத்துழைக்குமாறு காவல் துணைக்கண்காணிப்பாளர் கேட்டுக்கொண்டார். அவரும் சோதனைக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பதாக தெரிவித்தார். பின்னர் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள் சார்பதிவாளர் திரு.B.மூர்த்தி அவர்களிடம் அலுவலகத்தின் வருகைப்பதிவேட்டையும், தனிநபர் பண இருப்பு பதிவேட்டையும் ஆஜர் செய்யும்படி கேட்டுக்கொண்டார். வருகைப்பதிவேட்டில் 30.01.2026ம் தேதியன்று சார்பதிவாளர் திரு.B.மூர்த்தி மற்றும் அலுவலக உதவியாளர் திருமதி.S.உமாமகேஸ்வரி ஆகியோர் சுருக்கொப்பம் செய்திருந்தனர். பின்னர் தனிநபர் பணஇருப்பு பதிவேட்டை ஆய்வு செய்தபோது இன்று பண இருப்பாக கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டு சுருக்கொப்பம் இடப்பட்டிருந்தது.

வ.எண்	அலுவலரின் பெயர் மற்றும் பதவி	கையிருப்பு விபரம் ரூ.
1	திரு.B.மூர்த்தி.40/2026, த/பெ.,பாலசுப்பிரமணி சார்பதிவாளர், கீரனூர் சார்பதிவகம், (On Deputation) கள்ளிமந்தையம் சார்பதிவாளர் அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம்.	270/-
2	திருமதி.S.உமாமகேஸ்வரி,வயது.33 /2026, க/பெ.ஜெகதீசன், உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், கள்ளிமந்தையம், திண்டுக்கல் மாவட்டம்.	700/-
3	திரு.சி.முத்துச்சாமி, வயது 46/2026 த/பெ. சின்னச்சாமி, Data Entry Operator, சார்பதிவாளர் அலுவலகம் கள்ளிமந்தையம், திண்டுக்கல் மாவட்டம்.	650/-

4	திருமதி.K.சிவரஞ்சனி, வயது.29/2026, த/பெ.கூடலிங்கம், Camera Operator, சார்பதிவாளர் அலுவலகம், கள்ளிமந்தையம், திண்டுக்கல் மாவட்டம்.	200/-

பின்னர் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள் என் முன்பாக சார்பதிவாளர் திரு.மூர்த்தி அவர்களை சோதனை செய்ய அவர் அணிந்திருந்த அடர் நீலநிற பேண்டின் இடது பக்க சைடு பாக்கெட்டில் ஐநூறு ரூபாய் தாள்கள் 8 எண்ணிக்கையில் ரூ.4,000/- மற்றும் நூறு ரூபாய் தாள்கள் இரண்டு எண்ணிக்கையில் ரூ.200/- என மொத்தம் ரூ.4200/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பணம் குறித்து சார்பதிவாளர் திரு.மூர்த்தி அவர்களிடம் விளக்கம் கேட்க, அந்த பணம் அவரது சொந்தபணம் என்று தெரிவித்தார். ஆனால் 30.01.2026ம் தேதியன்று அலுவலக தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் அவரது கையிருப்பாக ரூ.270/- மட்டுமே குறிப்பிட்டிருந்தார். எனவே அவர் பேண்ட் பாக்கெட்டில் கண்டறியப்பட்ட ரூ.4200/-ல் செலவு போக ரூ.200/- மட்டுமே அவரது சொந்தபணம் என்றும், மீதி பணம் ரூ.4,000/- க்கு அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், அந்த பணம் ரூ.4,000/- பத்திர பதிவு செய்ய வந்த பொதுமக்களிடம் பத்திரங்களை பதிவு செய்து தந்ததற்காக லஞ்சமாக கேட்டுப்பெற்ற பணம் என்று நம்புவதற்கு போதிய முகாந்திரம் இருந்ததால் அந்த பணம் ரூ.4000/- விசாரணைக்காக என் முன்பாக மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்னர் துணைக்காவல் கண்காணிப்பாளர் அவர்கள் சார்பதிவாளர் திரு.மூர்த்தி அவர்களின் கைப்பை குறித்து கேட்க, அதற்கு அவர் இன்று கைப்பை எதுவும் கொண்டு வரவில்லை என்றும், Lunch Bag மட்டும் கொண்டு வந்ததாகவும், சாப்பிட்டபின் அந்த பேக்கை அலுவலகத்தின் பதிவுகள் வைப்பறை அறைக்குள் வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். அதன்பேரில் அந்த Lunch Bag-ஐ எடுத்து ஆஜர் செய்யுமாறு துணைக்காவல் கண்காணிப்பாளர் அவர்கள் சார்பதிவாளர் திரு.மூர்த்தி அவர்களை கேட்டுக்கொண்டார். அதன்பேரில் அந்த அலுவலகத்தின் பிரதான நுழைவு வாயிலை அடுத்து அமைந்துள்ள வரவேற்பறையின் வடக்கே தெற்கு முகம் பார்த்தவாறு

அமைந்திருந்த பதிவுகள் வைப்பறை என்று எழுதப்பட்டிருந்த அறையினை திறந்து நானும் காவல் துணைக்கண்காணிப்பாளர் மற்றும் போலீஸ் பார்டியினருடன் உள்ளே சென்றோம். மேற்படி அறையின் கிழக்கு மற்றும் மேற்குபுற சுவற்றில் சிமெண்டினால் ஆன கப்போர்டுகள் பொருத்தப்பட்டிருந்தன.அந்த அறையின் கிழக்குபுற சுவற்றில் மூன்று அடுக்காக பொருத்தப்பட்டிருந்த கப்போர்டின் கீழ் அடுக்கின் வடகிழக்கு மூலையில் கருப்பு மற்றும் சிவப்பு நிறத்திலான Race என்று பொறிக்கப்பட்டிருந்த லஞ்ச் பேக்கை சார்பதிவாளர் திரு.மூர்த்தி அவர்கள் எடுத்து எனது முன்பாக ஆஜர் செய்தார். அந்தபேக்கை சார்பதிவாளர் திரு.மூர்த்தி அவர்களின் இருக்கைக்கு எடுத்து வந்து என் முன்பு திறந்த சோதனை செய்தபோது ஐநூறு ரூபாய் தாள்கள் அடங்கிய கட்டு ஒன்று இருப்பது கண்டறியப்பட்டது. அதனை எண்ணிப்பார்த்தபோது ஐநூறு ரூபாய் தாள்கள் 58 எண்ணிக்கையில் ரூ.29,000/- இருப்பது கண்டறியப்பட்டது. பின்னர் மேற்படி லஞ்ச்பேகினுள் மடித்து வைக்கப்பட்டிருந்த இளம் பச்சை நிற பை ஒன்றினை வெளியே எடுத்து பார்த்தபோது அந்த பையின் இருபுறமும் "வாழ்க வளமுடன், தங்கள் வருகைக்கு நன்றி" என்று பொறிக்கப்பட்டிருந்தது. அந்த பையை திறந்து பார்த்தபோது ஐநூறு ரூபாய் தாள்கள் அடங்கிய கட்டுகள் 8 எண்ணிக்கையில் இருப்பது கண்டறியப்பட்டது. அந்த கட்டுகளை என் முன்பாக எண்ணிப்பார்த்தபோது ஒவ்வொரு கட்டிலும் ஐநூறு ரூபாய் தாள்கள் நூறு எண்ணிக்கையில் மொத்தம் 800 தாள்கள் என மொத்தம் ரூ.4,00,000/- இருப்பது கண்டறியப்பட்டது. அது குறித்து சார்பதிவாளர் திரு.மூர்த்தி அவர்களிடம் விளக்கம் கேட்டதற்கு, அதற்கு அவர் பதிவுகள் வைப்பறையில் தன்னுடைய லஞ்ச் பேக்கை மட்டுமே வைத்ததாகவும், அதற்குள் எவ்வாறு பணம் வந்தது என்று தனக்கு தெரியாது என்றும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், இன்று பதிவு செய்யப்பட்ட பத்திரங்களை பதிவு செய்து தந்ததற்காக பொதுமக்கள் மற்றும் ஆவண எழுத்தர்களிடம் லஞ்சமாககேட்டு பெற்ற பணம் என்று நம்புவதற்கு போதிய முகாந்திரம் இருந்ததால் விசாரணைக்காக என் முன்பாக மகஜரில் அந்த பணம் ரூ.4,29,000/-

கைப்பற்றப்பட்டது. பின்னர் பதிவுகள் வைப்பறையின் மற்ற பகுதிகளில் சோதனை செய்ய சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ கண்டறியப்படவில்லை. பின்னர் மேற்படி அலுவலகத்தின் சார்பதிவாளர் இருக்கையின் மேற்கே கிழக்கு முகம் பார்த்தவாறு அமைந்திருந்த கணினி அறையில் சோதனை செய்தபோது அங்கிருந்த இரு பெண்களை விசாரிக்க ஒருவர் அவரது பெயர் திருமதி.உமாமகேஷ்வரி, உதவியாளர் என்றும், மற்றொருவர் திருமதி.சிவரஞ்சனி, Camera Operator என்றும் தெரிவித்தனர். அவர்களது கைப்பையை சோதனை செய்ய கையிருப்பு பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள பணம் தவிர சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ கண்டறியப்படவில்லை. பின்னர் அந்த அறையின் மேற்கு மூலை அருகே அடுக்கி வைக்கப்பட்டிருந்த பதிவேடுகளை சோதனை செய்ய பதிவேடுகளுக்கிடையே ஐநூறு ரூபாய்தாள் 16 எண்ணிக்கையில் ரூ.8,000/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பணம் குறித்து அவர்களிடம் விளக்கம் கேட்க, அதற்கு அவர்கள் அந்த பணம் குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது' என்று தெரிவித்தனர். அந்த பணமானது பத்திரங்களை பதிவு செய்து தந்ததற்காக லஞ்சமாக பொதுமக்களிடம் கேட்டுப்பெற்று மறைத்து வைக்கப்பட்டிருந்த பணம் என்று நம்புவதற்கு போதிய முகாந்திரம் இருந்ததால் விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்னர் சார்பதிவாளர் இருக்கையின் கிழக்கே போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்திருந்த ஒருவரை விசாரிக்க அவரது பெயர் திரு.முத்துச்சாமி என்றும், Data Entry Operator ஆக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ய சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ கண்டறியப்படவில்லை. பின்னர் சார்பதிவாளர் இருக்கையின் அருகே நின்று கொண்டிருந்த ஒருவரை விசாரிக்க, அவரது பெயர் திரு.சதீஸ்குமார், தெற்கு தெரு, சத்திரப்பட்டி, ஒட்டன்சத்திரம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம் என்றும், ஆவண எழுத்தராக பணிபுரிவதாகவும், இன்று பதிவுக்காக கொடுத்த ஆவணத்தை திரும்ப பெற வந்ததாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ய சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ கண்டறியப்படவில்லை.

பின்னர் அந்த அலுவலகத்தின் மற்ற அறைகளை என் முன்பாக சோதனை செய்ய சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ கண்டறியப்படவில்லை. பின்னர் சார்பதிவாளர் அலுவலகத்தில் வரவேற்பறையில் நின்று கொண்டிருந்தவர்களை விசாரிக்க அவர்களில் ஒருவர் திரு.கந்தசாமி என்றும், கதவு எண்.9/1, 19வது குறுக்குத்தெரு, குமரன்நகர், புத்தூர், திருச்சி என்றும், கள்ளிமந்தையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் அவரது சகோதரிகள் திருமதி. ராஜாமணி மற்றும் திருமதி.ஜெயமணி ஆகியோரிடமிருந்து 9 ஏக்கர் 22 சென்ட் நிலத்தை தான செட்டில்மெண்ட் முறையில் அவரது பெயரில் எழுதிக்கொடுத்த ஆவணத்தை பதிவு செய்வதற்காக அவரது சகோதரிகளுடன் வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ஐநூறு ரூபாய்தாள்கள் 30 எண்ணிக்கையில் ரூ.15,000/- இருப்பது கண்டறியப்பட்டது. அந்த பணம் குறித்து விளக்கம் கேட்க, திருச்சியில் இருந்து வந்ததால் கைச்செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் என் முன்பாக அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் திரு.கந்தசாமி அவர்களின் ஆவணம் பதிவு செய்யப்பட்டது குறித்து சார்பதிவாளர் அவர்களிடம் கேட்க, அவரது ஆவணம் பரிசீலனையில் இருப்பதாகவும், பணம் செலுத்தியதற்கான ஒப்புகை சீட்டை சமர்ப்பித்தபின் ஆவண பதிவு செய்யப்படும் என்று தெரிவித்தார். பின்னர் திரு.கந்தசாமி அவர்கள் பணம் செலுத்தியதற்கான ஒப்புகை சீட்டை சமர்ப்பித்தார். அதன் பேரில் சார்பதிவாளர் அவர்கள் திருமதி.ராஜாமணி அவர்களிடம் இருந்து இணைய வழியில் ரூ.45,610/-ஐ பெற்றுக்கொள்ளப்பட்டது தொடர்பாக ரசீது எண்.159/2026-ஐ கையொப்பமிட்டு வழங்கினார். நிலுவையில் உள்ள திரு.கந்தசாமி அவர்களின் ஆவணத்தை விரைவில் வழங்குமாறு சார்பதிவாளர் அவர்களை காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள் கேட்டுக்கொண்டார். மேலும் ஆஜரில் இருந்த தனிநபர்கள் திரு.டேவிட் குணசீலன் மற்றும் திரு.கண்ணன் ஆகியோரை விசாரிக்க அவர்கள் ஆவண எண்.99/2026ல் சாட்சி கையொப்பம் செய்துள்ளதாகவும், அந்த ஆவணத்தை திரும்ப பெறுவதற்காக

காத்திருந்ததாகவும் தெரிவித்தனர். அவர்களை சோதனை செய்தபோது திரு.கண்ணன் என்பவரிடம் மட்டும் ரூ.13,890/- இருந்தது. அந்த பணம் அவரது சொந்தபணம் என்று தெரிவித்ததால் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்ட ஆவணங்கள் குறித்த கணக்குகள் மற்றும் வருகைபதிவேடு, தனிநபர் பண இருப்பு பதிவேடு ஆகியவற்றின் தொடர்புடைய பக்கங்களை நகல் எடுத்து சான்றொப்பமிட்டு வழங்குமாறு சார்பதிவாளர் அவர்களை காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள் கேட்டுக்கொண்டார். அதன்பேரில் கீழ்கண்ட ஆவணங்களை சான்றொப்பமிட்டு விசாரணைக்காக காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களிடம் சார்பதிவாளர் அவர்கள் வழங்கினார்.

வ எண்.	ஆவண விபரம்	தாள்களின் எண்ணிக்கை
1.	Year 2026 Month January Account A Kallimandyam , Date 30.01.2026	1
2.	Year 2026 Month January Birth/Death Case Account Kallimandyam , Date 30.01.2026	1
3.	Year 2026 Month January Section 41 Kallimandyam , Date 30.01.2026	1
4.	Year 2026 Month January IP Camera/CD Account Kallimandyam , Date 30.01.2026	1
5.	Year 2026 Month January Account D Kallimandyam , Date 30.01.2026	1
6.	Year 2026 Month January Sub-Division Account Kallimandyam , Date 30.01.2026	1
7.	G- கணக்குப்பதிவேடு ஆரம்பம் 01.06.2020	2
8.	H- கணக்குப்பதிவேடு ஆரம்பம் 01.08.2025	2
9.	களப்பணியதிவேடு ஆரம்பம் 01.01.2026	2
10.	வருகைப்பதிவேட்டின் தொடர் குறிப்பேடு ஆரம்பம் 01.01.2026	2
11.	நிலையான முன்பணம் பதிவேடு ஆரம்பம் 01.01.2026	2
12.	தனிநபர் பணம் இருப்பு பதிவேடு ஆரம்பம் 01.01.2026	4

13.	தொகுதி எண்.10 வருகைப்பதிவேடு ஆரம்பம் 01.01.2026	2
14.	தொகுதி எண்.28 வருகைப்பதிவேடு ஆரம்பம் 01.01.2026	3

மேற்கண்ட ஆவணங்கள் விசாரணைக்காக காவல் துணைக்கண்காணிப்பாளரால் மகஜரில் கைப்பற்றப்பட்டது. சோதனையின் போது கண்டறியப்பட்ட கணக்கில் வராத ரூ.4,41,000/- பணமானது பத்திரப்பதிவிற்கு வரும் பொதுமக்கள் மற்றும் பத்திர எழுத்தர்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணம் என்று நம்புவதற்கு தகுந்த முகாந்திரம் இருந்ததால், கீழ்கண்டவாறு பணம் கைப்பற்றப்பட்டது.

வ.எண்	அலுவலரின் பெயர் மற்றும் பதவி	கைப்பற்றப்பட்ட பணம் விபரம் ரூ.
1	சார்பதிவாளர் திரு.B.மூர்த்தி அவர்களின் Lunch Bag-ல் கண்டறியப்பட்ட பணம்	4,29,000/-
2	சார்பதிவாளர் திரு.B.மூர்த்தி அவர்களின் இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் கண்டறியப்பட்ட பணம்	4,,000/-
3	கணினி அறையில் ஆவணங்களுக்கிடையே கண்டறியப்பட்ட பணம்	8,000/-
	மொத்தம்	4,41,000/-

மேலும் சோதனையின் போது நான் மேலே கண்டவாறு பணம் கைப்பற்றப்பட்ட சார்பதிவாளர் திரு.மூர்த்தி மற்றும் அலுவலகத்தில் இருந்த பிற பணியாளர்கள் மற்றும் தனிநபர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இத்திடீர் தணிக்கையின் போது அலுவலகத்திலிருந்த ஆவணங்களுக்கோ மற்ற பொருட்களுக்கோ சேதம் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் சோதனையின் போதிருந்த அலுவலர்களுக்கோ, மற்றவர்களுக்கோ உடல் ரீதியாகவோ மற்றும் மன ரீதியாகவோ எவ்வித துன்புறுத்தலும் ஏற்படுத்தவில்லை. இந்த திடீர் இணை ஆய்வு தொடர்பாக செயல்முறை குறிப்புகள் 30.01.2026ம் தேதி 18.30 மணிமுதல் 21.45 மணிவரை தயார் செய்யப்பட்டது. எனவே மேற்படி கணக்கில் வராத லஞ்சப்பணம் ரூ.4,41,000/- தொடர்பாக திண்டுக்கல் மாவட்டம், கள்ளிமந்தையம் சார்பதிவாளர்

அலுவலகத்தில் பணிபுரியும் திரு.B.மூர்த்தி, சார்பதிவாளர், கீரனூர் சார்பதிவகம், (On Deputation) சார்பதிவாளர் கள்ளிமந்தையம் சார்பதிவகம், திண்டுக்கல் மாவட்டம் என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/- xxxxx (A.Chitrakala, 31/01/2026)

Madam, Received the complaint on 31.01.2026 at 16.00 Hrs and registered a case in Dindigul Vigilance and Anti-Corruption Cr.No.01/2026 u/s 7(a) of P.C Act 1988, as amended in 2018, on 31.01.2026 at 16.00hrs. Sd/-xxxxx (J.Nagarajan, Deputy Superintendent of Police, V&AC, Dindigul 31.01.2026)

Original FIR along with the complaint of Tmt.A.Chitrakala, the Inspection Cell Inspector, O/o. the Inspection Cell Officer, Madurai and the Joint Surprise check proceedings are submitted to the Principal District Sessions Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

31/1/26

(J.Nagarajan)
Dy.Supdt. of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.